ஒன்றிணைந்து போராடுவோம்
ஒன்றிணைந்து போராடுவோம்
ஒன்றிணைந்து போராடுவோம்
ஒன்றிணைந்து போராடுவோம்

# ஒன்றிணைந்து போராடுவோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of TAMIL EELAM

# ஒன்றிணைந்து போராடுவோம்

**அரசியல் பிரிவு**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

## நுழைவாயிலில்...

தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ் பேசும் ஒவ்வோர் மக்களினதும் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் அடிப்படை நோக்கமாகக் கொண்டது. கூர்மையடைந்து வரும் போராட்டத்தில் இன்றும் எமக்கிடையேயான வர்க்கரீதியான, மதரீதியான, சமூகரீதியான, பால்ரீதியான அடக்கு முறைகள் வெளிப்படுவது அநுமதிக்கப்படமுடியாத ஒன்றுகும். சிறிலங்கா அரசின் இன அடக்குமுறைக்கெதிரான உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கும் போது அதற்கொப்பான அடக்குமுறையை எம் மத்தியில் விட்டுவைத்தல் எவ்வகையிலும் நியாயமாகாது.

எனவே எமது இறுதி இலட்சியமான சுதந்திர தமிழீழம் இவை அனைத்தும் களையப்பட்ட மக்கள் விடுதலையை மையமாகக் கொண்ட தமிழீழமாகவே மலரும். இதே நேரம் இன்றைய போராட்டப் பாதையினிடையே ஏற்படும் பல்வேறுபட்ட சிக்கல்களை சாதுரியமாகக் கையாளவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழ் பேசும் மகனுக்கும் உரியதாகும். இந்த வகையில் அண்மைக் காலத்தில் எமது வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமாக தமிழ்-முஸ்லீம் கலவரம் உள்ளது. பெரும்பான்மை சிங்களவரால் அடக்கு முறைக்குள்ளாகி வரும் இரு சமூகங்களுக்கும் பாரிய சேதங்களேற்பட்டன.

தமிழ் - முஸ்லீம் மக்களிடையே காலத்துக்குக் காலம் சிறு பிரச்சனைகள் சச்சரவுகள் ஆங்காங்கே தோன்றி மறைந்து கொண்டேயிருந்தன. பழைய பிற்போக்குத் தலைமையால் இவ்விரு சமூகங்களிடையேயும் இயல்பான ஓர் ஒற்றுமையற்ற நிலை தோற்றம் பெற்று வந்த போதும் இது ஒருபோதும் ஓர் பெரிய பிரச்சனையாக உருவெடுக்கவில்லை.

ஆனால் சமீபத்தில் சிங்கள அரசு தன் பிரித்தாளும் தந்திரப்படி மொசாட்டின் உறுதுணையோடு தமிழீழப் போராட்டத்தை நசுக்க தமிழ்-முஸ்லீம் மக்களிடையேயிருந்து பெரும் மோதலை தானே நின்று நடத்தி பெரும் கலவரத்தை தோற்றுவித்தது. (சிறிலங்கா அரச படைகள் மொசாட்டின் துணையோடு இக்கலவரத்தைக் கொண்டு நடத்தியதற்கான



ஆதாரங்கள் மிகத் துல்லியமாக நிரூபிக்கப்பட்டுள்ளன.)

தமிழ் முஸ்லீம் மக்களிடையேயான இன்றைய முரண்பாட்டு நிலையை பல கோணத்திலிருந்து ஆராயவேண்டும். சிங்கள அரசு திட்டமிட்டு தோற்றுவிக்கும் முரண்பாடென்பதோடு இதற்கு வாய்ப்பான வேறு சூழ்நிலைகள் என்னவென்பதை கருத்திலெடுக்க வேண்டும்.

பொதுவாக இயக்கங்கள் அல்லது இயக்கங்களின் பெயரால் நடத்தப்படும் ''மக்கள் விரோத செயற்பாடுகள்'' முரண்பாட்டு நிலைமையை கூர்மையடையவே செய்துள்ளன என்பதனை மறுக்கமுடியாது. இவை முஸ்லீம் மக்களுக்கு எதிராக மட்டும் திட்டமிட்டுச் செய்யப்பட்டவையல்ல என்பதையும் சகல தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் மிக மோசமாக இடம் பெறுகின்றன என்பதையும் மிகுந்த வேதனையுடன் சுட்டிக் காட்டுகிறோம்.

முதலில் தமிழ் மக்கள் மத்தியில் சிலரால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய ஆட்கடத்தல், வாகனக்கடத்தல், கொலை, கொள்ளைச் சம்பவங்கள் பின்பு முஸ்லீம் மக்கள் மத்தியில் பரவியபோது அதுவே தமிழ்-முஸ்லீம் மக்களிடையேயான ஒரு முரண்பாட்டை உருவாக்குவதற்கான காரணியாய் வளர்க்கப்பட்டு விட்டது. இத்தகைய நடவடிக்கைகளை சிங்கள அரசு பயன்படுத்தி தமிழ்-முஸ்லீம் மக்களிடையே பெரும் மோதலை உருவாக்கி விட்டது. ஆட்கடத்தல், வாகனக் கடத்தல்,

கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி முரண்பாடுகளை சமூக ரீதியில் தோற்றுவித்து எம்மிரு சமூகங்களையும் அழிக்கும் நடவடிக்கையில் எதிரி ஈடுபட்டுள்ளான் என்பதனை நாம் வேதனையுடன் கூறவேண்டியவர்களாய் உள்ளோம்.

எனவே முஸ்லீம் சகோதரர்களே, இத்தகைய செயற்பாடுகளை தமிழ் - முஸ்லீம் என்ற சமூக அடிப்படையில் நோக்காது இவை தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள ஓர் பொதுப் பிரச்சனை என எடுத்துக் கொண்டு இதனை சகலரும் இணைந்து எதிர்ப்போம்.

சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி எதிரி தமிழ்-மூஸ்லீம் மக்களிடையே பெரும் இனக்கலவரத்தைத் தூண்டித் தூபமிட்டுள்ளான் என்பதனை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. முஸ்லீம் மக்களுக்கேற்பட்ட அழிவுகள் மிக மிக வருந்துதற்குரியவை. தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஒரு சில தீய சக்திகளும் அமைப்பு ரீதியீல் இதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதனையும் வேதனையுடன் ஒப்புக் கொள்கின்றோம். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிலவ இடமில்லாதவாறு நாம் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்வோம். இதேநேரம் முஸ்லீம் மக்களில் ஒரு சிலர் தெரிந்தோ தெரியாமலோ அரசின் சதித்தனத்திற்கு துணை போவது எந்த ஒரு சமூகப் பொறுப்புள்ள முஸ்லீம் சக்தியாலும் ஏற்றுக்கொள்ள மூடியாததாகும். நம் அனைவரினதும் பொது எதிரியாகிய சிங்கள அரசு மொசாட்டின் அனுசரணையுடன் இன்று



முஸ்லீம்களில் ஒரு சிலருக்கு ஆயுதமளித்து செயற்பட்டு வருகிறது. போராட்டத்தை நசுக்க இப்பிரித்தாளும் முயற்சியை கையாளும் அ்ரசின் இவ் ஆயுதங்கள் நாளை முஸ்லீம்களுக்கு எதிராக திரும்பும் என்பதில் ஐயமில்லை. எனவே முஸ்லீம் சமூகத்தின் மத்தியிலுள்ள ஒருசில அரசின் அமைப்புகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு முற்போக்கு முஸ்லீம் சக்திகளுக்கே உரித்தான சமூகப் பணியாகும்.

இறுதியாக மலையக முஸ்லீம் தமிழ் மக்களே! எமக்கிடையே முரண்பாட்டை வளர்த்து மோதலை உருவாக்கி போராட்டத்தை நசுக்கி எம் அனைவரையும் நிரந்தர அடிமையாக்க சிறிலங்கா அரசு மொசாட்டின் துணையுடன் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது. சிங்கள அரசின் இச்சதி வேலைகளை முறியடித்து நாம் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் என்ற உணர்வோடு எமது பூரண சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்குமான தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பொது எதிரிக்கெதிராக ஒன்றிணைந்து முன்னெடுப்போம்.

தமிழ் பேசும் மக்களது விடுதலைப் போராட்டம், தெற்காசியப் பிராந்தியத்திலும், சர்வ தேசிய ரீதியாகவும் ஒடுக்கப்படும் மக்களினங்களின் விடுதலை வேட்கையை மிகக் காத்திரமாக வெளியிடும், சர்வதேச புரட்சிகர இயக்கலின் ஒரு அங்கக்கூறுகும்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் சிறுபான்மையோராக விளங்குவது, தமிழ் பேசும் முஸ்லீம்களே.

அதே போது, இத்தீவின் அரசியல், சமூகப்பொருளாதார நீரோட்டத்தில், அவர்களது பங்கு அளப்பரியது. இன்றைய தேசிய இனப்பிரச்சனையானது (இதனை தமிழ் பேசும் மக்களது, தேசிய புரட்சிகரக் காலகட்டமெனக் குறிப்பிடலாம்) பூசி மெழுகி மறைக்கப்பட்டிருந்த தமிழ் பேசும் மக்களது உள் சமூக முரண்பாடுகளை வெளிக்கொண்டுவருகின்றது. இம்முரண்பாடுகளைக் களைய வேண்டும். களைவதற்கான வழிமுறைகளை ஆராயவேண்டும். செயற்படவும் வேண்டும்.

## தமிழ் பேசும் முஸ்லீம் மக்களது வரலாற்றுப் பின்னணி

தமிழ் பேசும் முஸ்லீம்களது இன்றைய இருப்பினையும், எடுக்க வேண்டிய எதிர்கால திசையமைவு குறித்தும் சரியான முடிவுக்கு வருவதற்கும், அவர்களது வரலாற்றுப்

பின்னணியை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. இலங்கைத் தீவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில், திராவிடப் பண்பாடு சார்ந்த ஒரு இனம் வாழ்ந்த தென்பதுவும், பின்னர் ஈழத்தமிழ், சிங்கள இனப் பண்பாடுகள் உருவாகின என்பதுவும் வரலாற்று உண்மைகளாகும்.

முஸ்லீம் மக்களது பெருமளவிலான குடியேற்றங்கள் கி.பி. 14ஆம் நூற்றுண்டில் ஏற்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. அதற்கு முன்னரே கி. பி. 6ஆம் நூற்றுண்டில் அரபியர்கள் மிகச் சிற்றளவில் வாணிப அடிப்படையில் குடியேறியிருந்தனர் என்ற கருத்தும் உண்டு. வர்த்தக நோக்கத்துடன் தென்னிந்தியாவுக்கு கடலோடிகளாக முதன்முதல் வந்த அராபிய முஸ்லீம்கள் அங்கு கலப்புத் திருமணம் செய்திருந்தனர். மேலும் தமிழ் மக்களிற் சிலர் மதம் மாறினர். இப்படியாகத் தமிழ் பேசும் முஸ்லீம்கள் உருவாகினர். இவர்கள் வாணிப நோக்குடன் இலங்கைத் தீவின் கரையோரப்பகுதிகளில் முதலில் குடியேறினர். இம் முஸ்லீம்கள் தமிழையே தமது தாய்மொழியாகவும், வெளித்தொடர்பு ஊடகமாகவும் உபயோகித்தனர் என்ருலும் தமது மதஞ்சார்ந்த பண்பாட்டினைக் கைவிடாது வாழ்ந்தனர். குறிப்பாக இலங்கையில் புத்தளம், கல்பிட்டி, மன்னுர், பேருவளை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் குடியேற்றங்கள் நிகழ்ந்தன. உள்நாட்டு வர்த்தக நோக்கிற்காக அக்காலத்திய இராசதானிகளின் நகரங்களிலும் குடியேறினர். இவர்கள் இத்தீவின் உட்பகுதிகளுக்குப் பரவியதற்கு இன்னுமொரு காரணமுண்டு, இலங்கைக்கு முதலாவது காலனியாதிக்க வாதிகளாக படையெடுத்தவர் போர்த்துக்கீசியரே. போர்த்துக்கீசியர் முஸ்லீம்களுடன் வர்த்தகப் போட்டியிலும் ஈடுபடலாயினர். அந்நியப்படையெடுப்பாளர்களின் கடும் போக்கு இவர்களை இத்தீவின் உள்பகுதிகளுக்கும் ஊடுபரவ வைத்தது. மேலும் இத்தமிழ் பேசும் முஸ்லீம்களில் பலர் போர்த்துக்கீசியரை எதிர்த்து கடும் போராட்டத்தில் ஈடு



பட்ட அக்காலத்திய கண்டிய, யாழ்ப்பாண இராச்சியங்களுடன் இணைந்து போரிட்டதற்கான சரித்திர சான்றுகள் நிறையவே உள்ளன. கோட்டை இராச்சியம் போர்த்துக்கீசியரின் பீரங்கி முழக்கச் சத்தத்திற்கு முன்னே எவ்வித போராட்டமுமின்றி மண்டியிட்டது. கோட்டையில் பொம்மை அரசே இருந்தது.

மேற்குக் கரையோர மேற்தட்டு முஸ்லீம்கள் வாணிப நோக்குடனை சமரசத்தை ஐரோப்பியருடன் செய்து கொண்டனர். என்ருலும், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் பேசும் முஸ்லீம்கள், ஏனைய தமிழ்மக்களைப் போன்று வடக்கு கிழக்கு பகுதிகளை தமது பாரம்பரிய தாயகமாகக்கொண்டு அதே பொதுப் பொருளாதாரத்தைக் கைக்கொண்டு வாழ்ந்து வந்தனர். வர்த்தகம், விவசாயம் இம்மண்ணுக்கே உரித்தான சிறு கைத்தொழில்களிலும் ஈடுபட்டு தமிழ்த்தேசிய நீரோட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

மேலும் பிற மாகாணங்களிலும் காலனியாதிக்க வாதிகளுடன் சமரசப்பட்டுக் கொண்ட மேல் தட்டினரைத் தவிர்ந்த மற்றைய தமிழ் பேசும் முஸ்லீம்களும், தாம் வாழ்ந்து வந்த பிரதேச சூழலுக்கேற்ப தமது பொருளாதார வாழ்வினை அமைத்துக் கொண்டனர். இவர்களது அன்ருட கருத்துப்பரிமாறல்கள் நடப்பது தமிழ்மொழியிலேயே.

ஆனுல், நாம் இங்கு கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. ஒரே மொழி பேசும் மக்களினங்கள் ஒன்றுடன் ஒன்று சார்ந்தும், அண்மித்ததாகவும், வாழ்ந்து நிலைப்பட்டிருப்பது உலகளாவிய யதார்த்த நிலைப்பாடாகும். தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள், தமிழ்த்தேசிய இனத்துடன் இணைந்து வாழ்வது என்பது வரலாற்றுரீதியாகத் தவிர்க்க முடியாதது. ஏனெனில் இருபகுதியினரதும் அன்ருட பொருளா

தார வாழ்வின் இணைப்புப்பாலமாக விளங்குவது தமிழ் மொழியேதான்.

எனவே வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் பேசும் முஸ்லீம்களையும், ஏனைய தமிழ் பேசும் மக்களையும் பொதுப் பொருளாதாரத்தையும், பொதுப் புவியியல் பாரம்பரிய தொடர்புப் பிரதேசத்தையும், பொது மொழியையும், வெவ்வேறு கலாச்சாரப் பின்னணியையும் கொண்ட வரலாற்றுரீதியாக நிலைகொண்டுள்ள, ஒரே சமூகத்திரளினரின் இரு உட்பிரிவுகளாகக் கருதவேண்டியுள்ளது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி இலங்கையிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆக்கிரமிக்கப்பட்ட காலனிகளில் மக்களது விடுதலைப் போராட்டங்கள் முகிழ்க்கத் தொடங்கின. ஆங்கிலேயர் பிரித்தாளும் தந்திரத்தை இலங்கையிலும் பிரயோகித்தனர்.

## பேரினவாதத்தின் எழுச்சி

இலங்கையில் 1800களின் மத்தியிலும், கடைக் கூற்றிலும் பௌத்த மறுமலர்ச்சி, அந்நியமானவற்றிற்கு எதிர்ப்பு என்ற போர்வையில், சிங்கள பௌத்த பேரின வாதம் உருவெடுத்தது. இதனை வளர்தெடுத்தவர்கள், இலங்கை மண்ணின் மைந்தர்கள், சிங்கள பௌத்தர்களே எனவும், மற்றையோர் தம்மை ஒடுக்க வந்தவர்கள் எனவும் பிரகடனப்படுத்தினர். இக்கொள்கை வெளிப்பாடு இந்திய எதிர்ப்பு, முஸ்லீம் எதிர்ப்பு, தமிழர் எதிர்ப்பாக பரிணமித்தது.

இவ்வெதிர்ப்பு 1915ஆம் ஆண்டில், முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறையாக, செயல்வடிவம் எடுத்தது. இக்கலவரம் சிங்கள தேசிய வாதத்தின் வெளிப்பாடு. இது தமது ஏகாதிபத்திய நலன்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என



இனங்கண்டு கொண்ட ஆங்கிலேயர், மிகவும் கொடுமையான வகையில் இக்கலவரத்தை அடக்கினர். சிங்களத் தலைவர்கள் சிறையிடப்பட்டனர். இச்சிங்களத் தலைவர்களுக்காக, முன்னேக்கற்று சேர். பொன். இராமநாதன் வாதாடி அவர்களுக்கு விடுதலை பெற்றுத்தந்தார். ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் தந்திரத்துக்கு இது பெரும் வெற்றியே. சிங்கள, முஸ்லீம் மக்களிடையே ஆழமான பிளவும் இலங்கைத் தமிழ் மக்கள் மீது, தமிழ் பேசும் முஸ்லீம்களுக்கு அவநம்பிக்கையும் ஏற்பட்டது. கலவரத்தின் பின்னணியில் நின்று செயல்பட்ட சிங்கள, பௌத்த தேசியவாதிகள் தண்டிக்கப்படவில்லை. இவர்கள் ஆங்கிலேயர்களுடன் சமரசப்பட்டுக் கொண்டனர். இச்சமரச ஏற்பாட்டின் ஆணிவேராக செயல்பட்டவர் சேர். பொன். இராமநாதனே. இந்த நம்பிக்கை இன்மை இன்றும் தமிழ் பேசும் முஸ்லீம்கள் மத்தியில் நிலவுவது துரதிர்ஷ்டவசமான உண்மையாகும்.

1919ஆம் ஆண்டில் அரசியற் சீர்திருத்தத்தை கோரும் அரசியல் ஸ்தாபனமொன்று உருவாகியது. இதுவே இலங்கைத் தேசிய காங்கிரசாகும். சேர். பொன். இராமநாதன் இத்தாபனத்தின் தலைவரானார். மேலும், இத்தாபனம், சிங்கள, இலங்கைத் தமிழ் மக்களின் நலனைப் பேணும் ஒரு அமைப்பே தவிர, முஸ்லீம்களை இது அரவணைக்கத் தவறியது. அவர்களை இலங்கையின் தேசிய அரசியல் நீரோட்டத்தினின்றும் அந்நியப்படுத்தும் ஒரு பிற்போக்குத்தனமான அமைப்பாக விளங்கியது.

பின்னர் வந்த அரசியல் கட்சிகளும், ஒரு சில முஸ்லீம்களை தமது நலனை நிறைவேற்றுவதற்கான கைப்பொம்மைகளாக வைத்திருந்து, தமிழ் பேசும் முஸ்லீம்களின் மெய்யான அபிலாசைகளை நிறைவேற்றாமல் செயற்பட்டனர். இச்சுயநல நாட்டம், வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் பேசும் முஸ்லீம்கள் மீதும், மிகுதியான மாவட்டங்களில் வாழும்

தமிழ்பேசும் முஸ்லீம்களினதும் உண்மையான நலனை பேணுவதாக இல்லாது, அவர்கள் பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கு ஆளானபோதும், சமரசமென்னும் மாய இருண்ட போர்வையாக உண்மை நிலையை மறைப்பதாக விளங்குகின்றது.

## தமிழ் பேசும் முஸ்லீம் மக்களை ஒடுக்க பல் முனைகள்

தமிழ்பேசும் முஸ்லீம் மக்களை ஒதுக்கும் கொள்கை—அவர்களும் வடக்குக் கிழக்குவாழ் தேசிய இனத்தின் முக்கிய அங்கம் என்ற யதார்த்த உண்மையின் மறுதலிப்பு—இன்றைய சிங்கள பேரினவாதிகளின் ஒரு வலிமை பொருந்திய ஆயுதமாக விளங்குகிறது.

## அரசியல்

1833ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் பரிபாலன சபையில், முஸ்லீம்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. 1889ஆம் ஆண்டிலேயே முஸ்லீம்களுக்கு ஒரேஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டார். 1923ஆம் ஆண்டு பரிபாலனசபை திருத்தி அமைக்கப்பட்டு இலங்கையில் உள்ள முஸ்லீம்களால் மூவர் தெரிந்தெடுக்கப்பட்டனர். எனவே 1923 ஆம் ஆண்டிற்கு முன்னர் முஸ்லீம் மக்களுக்கு தமது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கவில்லை என்பது புலனாகின்றது. இன அடிப்படையிலான பிரதிநிதித்துவம் 1931ஆம் ஆண்டு வரையில் இருந்தது. பரிபாலன சபைக்குப் பதிலாக ''ஸ்ரேற் கவுன்சில்'' 1931ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது. இன அடிப்படையிலான பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டு, தொகுதி ரீதியான பிரதிநிதித்துவத்தின் விளைப்பயனாக, ஒரேஒரு முஸ்லீமே, மட்டக்களப்பின் தென்பகுதியிலிருந்து தெரிவானார்.



இப்பிரதிநிதித்துவம் போதாமையால் அல்ஹாஜ், ரீ. பி ஜாஜாவின் முயற்சியின் பேரில் தேர்தல் தொகுதி எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தாது முதலாம் சபைக்கு ஒருவரும், இரண்டாம் சபைக்கு இருவருமாக நியமிக்கப்பட்டனர். கிழக்கிலங்கையில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட எந்தவொரு முஸ்லீம் பிரதிநிதியும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக மந்திரி சபையில் இடம்பெறவே இல்லை.

1948ஆம் ஆண்டின் பிரஜா உரிமைச்சட்டத்தினால், மலையகத் தமிழ்த் தொழிலாளிகள் பாதிப்படைந்தனர், பிரஜா உரிமையை இழந்தனர். இன்றும் தமிழ்பேசும் முஸ்லீம்கள் தமது பிரஜா உரிமையை நிரூபிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், உதாரணமாக, கடவுச்சீட்டு (Pass Port) விண்ணப்பத்துடன் தமது பேரன், பாட்டன் ஆகியோரின் சான்றிதழ்களையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இந்நிலைப்பாடு சிங்கள மக்கள் மத்தியில் என்றும் எழுந்ததேயில்லை. ஈழத் தமிழ் மக்களும் தமது பிரஜா உரிமையை நிரூபிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், இதே போன்ற சிக்கலை அடைவதுண்டு.

சிறிலங்கா சோஸலிசக் குடியரசின் அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு விசேட இடமளிக்கப்பட்டிருப்பதும் இம்மதத்தைப் பேணிப் பாதுகாப்பதும் அரசாங்கத்தின் கடமை எனக் கூறப்பட்டிருப்பது, ஒரு தனிமதத்திற்கு அரசாங்கம் தரும் விசேட உரிமை என்றே கொள்ளப்பட வேண்டும்.

மேலும் சிங்கள அரசகரும மொழிச்சட்டம் தமிழ் மக்களுக்கு எந்த வகையிலான பாதிப்பை ஏற்படுத்தியதோ அதேவிதமான பாதிப்பை தமிழ் பேசும் முஸ்லீம்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத ஒரு உண்மை. தற்போதய அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மை

யாக முஸ்லீம்கள் வாழும் பிரதேசங்கள் முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்துடன் இணைந்திருந்தன. ஆனால் இப்போது அங்கு முஸ்லீம் மக்களது விருப்பத்திற்கு மாறாக அப்பிரதேசங்கள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழி கொள்கையளவில் மட்டும் தமிழாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால் அம்பாறை மாவட்டத்து தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள் சிங்கள மொழியிலே அரச நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். எனவே ஏனைய தமிழ் மக்கள் எதிர்நோக்கும் தாய் மொழிச் சுதந்திர இழப்பை தமிழ் பேசும் முஸ்லீம்களும் எதிர்நோக்குகின்றனர்.

மேலும் கிழக்கில் தமிழ் பேசும் முஸ்லீம் மக்களது பிராந்தியங்கள் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டமை, கிழக்கில் மேலும் சில பகுதிகள் பொலனறுவை மாவட்டத்துடன் இணைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் ஆகியவை, முஸ்லீம் மக்களை அம்மாவட்டங்களின் சிறுபான்மையினராக்கி, அவர்களின் பாராளுமன்ற அங்கத்துவ வலுவை இழக்கவைப்பதற்கான, பொதுமன்றத்தில் அவர்களது குரலை நசுக்குவதற்கான ஏற்பாடுகள் என்பது தெளிவாகிறது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் இனிவரும் தேர்தல் நடத்தப்பட இருப்பதானது ஏற்கனவே உள்ள பிரதிநிதித்துவத்தை இழக்க வைக்கும் என்பதை முஸ்லீம் மக்கள் அறிந்துள்ளனர், எதிர்த்தும் உள்ளனர். உத்தேச பாராளுமன்றத்தில் 225 அங்கத்தவர்களில் இருவர் அல்லது மூவர் மட்டுமே தமிழ் பேசும் முஸ்லீம்களது பிரதிநிதிகளாகவிருப்பர். முஸ்லீம் மக்களது அரசியல் செயற்பாடுகளை ஒடுக்கும், திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று.



## நிலப் பறிப்பு

1930ஆம் ஆண்டளவில் பயிர்ச் செய்கை இலங்கையில் ஊக்குவிப்புப் பெற்றது. காடுகளைத் திருத்தி எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் வயல்களாக்கினர், அம்பாறையில் வாழ்ந்த தமிழ் பேசும் முஸ்லீம்கள். அம்பலத்தாறு, பொன்னன்வெளி, குடுவில்வட்டை, வெள்ளக்கல்தோட்டம், சோலவட்டை முதலிய ஏராளமான விவசாய கிராமங்கள் உருவாயின. ஆனால் 1965இல் பல காணிகள் சீனிக் கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்டன. சேனைக்கண்டம், அம்பலம் ஓயா, சோலவட்டைக் கிராமங்களிலிருந்து நட்ட ஈடுஇன்றி முஸ்லீம்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். பின் சிங்களவர் கரும்புச் செய்கையில் இக்காணிகளில் ஈடுபட்டுள்ளனர். கல்லோயாத் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட 44 குடியேற்றத் திட்டங்களில், 38 கிராமங்களை வெளியிலிருந்து வந்த சிங்களவர்களுக்கும், மிகுதி 6ஐ மட்டும் அக்கிராமகளின் பாரம்பரியக் குடிகளாகிய தமிழ் முஸ்லீம்களுக்குத் தந்தனர். 1982இல் பொத்துவில், அறுகம்பை, உல்லைக் கிராமங்களிலிருந்து வெளியேறுமாறு முஸ்லீம்கள் அரசாங்கத்தால் நிர்ப்பந்திக்கப்பட்டனர். பொலிஸார் பலாத்காரமாக வீடுகளை கொளுத்தி முஸ்லீம்களை வெளியேற்றினர். இன்றைய அரசாங்கத்தின் மாவட்ட அமைச்சர், முஸ்லீம், தமிழ் மக்களது காணிகளை சுவீகரிப்பதில் முன் நிற்கின்றார். தம்பலகாமம், பொத்தனையில் 4000 ஏக்கர் காணியில் முஸ்லீம்கள் விவசாயத்தை பாரம்பரியமாகச் செய்தனர். கந்தளாய்க் குடியேற்றம் ஏற்படுத்தப்பட்ட போது 1954ஆம் ஆண்டு இவ்விடங்களிலிருந்து முஸ்லீம்கள் விரட்டியடிக்கப்பட்டு சிங்களவர் குடியேற்றப்பட்டனர். 1967ஆம் ஆண்டு வண்ணாத்திப்பாலம், கற்குழி, வண்ஆறு முதலிய பகுதிகளிலும் இதுவே நடைபெற்றது.

மேலும் பௌத்த கலாசார புனரமைப்பு என்ற போர்வை யிலும் நிலப் பறிப்பு நடந்தேறி வருகிறது. 1983 ஐப்பசி 7ஆம் திகதி ஹன்சாட் தொகுதி 25 இலக்கம் 10இல் பிரசுர மாகியுள்ள படத்தில் அம்பாறையில் முஸ்லீம் பகுதிகளில் 43 பௌத்த சிதைவுகள் அடையாளமிடப்பட்டுள்ளது. 1960ஆம் ஆண்டு தீகவாப்பி விகாரையை அண்மித்த பிர தேசத்தில் 585 ஏக்கர் காணி முஸ்லீம் மக்களிடமிருந்து பௌத்த மத புனருத்தாரண வேலைக்காகச் சுவீகரிக்கப்பட்டது. இன்று வரையும் எவ்வேலையும் நடைபெறவில்லை. அம்பாறை மாவட்ட அரசியல் அதிகாரி திரு. சோமரத்தினவின் உறவினர்கள் தெற்கிலிருந்து வரவழைக்கப்பட்டு குடியேற்றப்பட்டுள்ளனர்.

பௌத்தமதக் கலாச்சார புனரமைப்பு என்பது அப்பட்டமான பௌத்த சிங்கள பேரினவாதத்தின் ஒரு தந்திரமே யாகும். சிதைவுச் சின்னங்களைச் சூழவர உள்ள பிரதேசங்களில் முஸ்லீம், தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பொய்யான சரித்திரச் சான்றுகளற்ற கற்பனையில் உதித்த பௌத்த மதச் சிதைவுகளும் தோற்றுவிக்கப்பட்டு கண்டுபிடிக்கப் படுகின்றன. இப்போது அரசாங்கம் தனது அடுத்தக்கட்ட நடவடிக்கையாக, பயிற்சியளிக்கப்பட்ட ஆயுதந் தாங்கிய சிங்கள வெறியர்களை தமிழ், முஸ்லீம் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் குடியேறுவதற்கு அனுப்பி வருகின்றது. இவர்கள் அயல் கிராமங்களில் வாழும் தமிழ், முஸ்லீம் மக்களை தொல்லை கொடுத்து விரட்டி வருகின்றனர்.

காணிப்பறிப்பால், பொதுவாக, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களும் தமிழ் பேசும் முஸ்லீம்களும் ஒரே பிரச்சனையை எதிர்நோக்குகின்றனர். சொந்த மண்ணிலேயே வன்முறை மூலம் அகதிகளாகின்றனர். இதேபோன்ற நிகழ்வுதான் ஜோர்தான் நதியின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்த பாலஸ்தீனியர்களுக்கும் ஏற்பட்டது. இன



ஒழிப்புக்கு இஸ்ரேலியர்களிடமிருந்து பாடங்கற்றுவரும் இன்றைய இனவாத அரசு நிச்சயமாக இந்த நீசச்செயலைத் தொடர்ந்து செய்யும். நிலப்பறிப்பு ஒடுக்கு முறையின் ஒரு வடிவம். வடக்குக் கிழக்குத் தமிழரதும், முஸ்லீம்களதும் அரசியல் அந்தஸ்தை இழக்க வைப்பதற்கும் ஒட்டாண்டிகளாக்குவதற்குமே இவ்வடிவம் செயல்படுத் தப்படுகிறது.

கல்வித்தர மேம்பாடு, வாழ்க்கைத்தர உயர்வின் ஒரு அளவுகோலான கல்வியை மறுப்பது ஒரு இனத்தின் அடிநாதமாகவுள்ள கலாச்சாரத் தனித்துவத்தை அழிப்பதற்கு சமமாகும். சிங்கள பௌத்த பேரினவாதிகள் இதை வெளிப்படையாகவே செய்து வருகின்றனர். முஸ்லீம் பாடசாலைகளுக்குத் தரப்படும் நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவு. முஸ்லீம் மக்களது சனத்தொகை விகிதாசாரம் 7.5 வீதம். ஆனால் முஸ்லீம் மாணவரது பல்கலைக்கழகப் பிரவேசம் 2 வீதம் மட்டுமே. வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் தராதரப்படுத்தலாகும். இதனால் முஸ்லீம்களுக்குக் கிடைக்க வேண்டிய விகிதாசாரத்தின்படி மேற்கல்வி கற்பது மறுக்கப்படுகின்றது.

சில மாவட்ட ரீதியாக முஸ்லீம் மாணவரது பல்கலைக் கழகப் பிரவேசம். 1983.

| மாவட்டம் | முஸ்லீம் சனத்தொகை 1981 | பாடசாலை | முஸ்லீம் மாணவர் தொகை | வீதம் | பல்கலைக் கழக அனுமதி |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 168,956 | 25 | 32,294 | 19.11 | 22. |
| கண்டி | 125,646 | 72 | 34,409 | 27.38 | 21. |
| அம்பாறை | 161,754 | 93 | 37,961 | 23.47 | 92. |
| திருமலை | 75,762 | 62 | 19,144 | 25.27 | 22. |
| ம.களப்பு | 79,662 | 37 | 16,951 | 21.28 | 21. |

| மாவட்டம் | முஸ்லீம் சனத்தொகை 1981 | பாடசாலை | முஸ்லீம் மாணவர் தொகை | வீதம் | பல்கலைக் கழக அனுமதி |
|---|---|---|---|---|---|
| அ. புரம் | 43,801 | 58 | 10,466 | 23.89 | 05. |
| களுத்துறை | 62,781 | 22 | 16,029 | 25.53 | 05. |
| புத்தளம் | 50,246 | 41 | 11,767 | 23.42 | 06. |
| மன்னர் | 30,079 | 28 | 08,131 | 27.03 | 13. |
| யாழ் | 14,169 | 07 | 03,096 | 21.85 | 04. |
| வவுனியா | 06,754 | 09 | 01,668 | 24.70 | இல்லை. |
| முல்லைத்தீவு | 03,816 | 02 | 00,877 | 22.98 | இல்லை. |
| மொனருகலை | 05,750 | 05 | 01,203 | 20.92 | இல்லை. |
| பொலனறுவை | 17,642 | 16 | 03,463 | 19.65 | 01. |

பல்கலைக் கழகத்தில் முஸ்லீம் மாணவர் புள்ளி விபரம்.

| கற்கைநெறி | மாணவர் | விகிதாசாரம் |
|---|---|---|
| கலை | 128 | 0.05 |
| வர்த்தகம் | 47 | 0.02 |
| சட்டம் | 13 | 0.00 |
| பொறியியல் | 25 | 0.01 |
| பெளதிகவிஞ்ஞானம் | 24 | 0.01 |
| உயிரியல் | 30 | 0.01 |
| மருத்துவம் | 20 | 0.01 |
| பல் வைத்தியம் | 01 | 0.00 |
| விவசாயம் | 09 | 0.00 |
| கட்டிடக்கலை | 01 | 0.00 |
| மிருகவைத்தியம் | 01 | 0.00 |
| | 299 | 0.11 வீதம் |

(ஆதாரம்: இலங்கையில் முஸ்லீம்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். தொகுப்பு: எம். ஐ. எம். முஹியத்தின்)



பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழக மாணவர் வரை முஸ்லீம் மாணவர் தொகை 270,797. ஆனுல் பல்கலைக் கழக முஸ்லீம் மாணவர் விகிதாசாரமோ 0.11 வீதம் மட்டுமே. மேற்தரப்பட்டுள்ள தரவுகளிலிருந்து முஸ்லீம் மக்களது கல்வி சிங்கள பௌத்த பேரினவாத நிர்வாகத் திஞல் எவ்விதம் பின்தள்ளப்பட்டுள்ளது என்பது புலனுகிறது.

## வேலை வாய்ப்பு

சுதந்திரத்திற்குப்பின் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஏராளமான அரசு நிறுவனங்களை ஸ்தாபித்தன. இத்தாபனங்களின் கொள்கை வகுப்பும், நிர்வாகமும் சிங்களவர்களின் கைகளிலேயே உள்ளது. எனவே தமிழ் பேசும் முஸ்லீம் மக்களுக்குக் கிடைக்கும் வேலை வாய்ப்பு மிகக் குறைவு.

| | | |
|---|---|---|
| 74 வீதம் சனத்தொகையுடைய | | சிங்களவருக்கு 83 வீதம் அரசாங்க வேலை வாய்ப்பு. |
| 18 வீதம் | ,, ,, | தமிழருக்கு 13 வீதம் அரசாங்க வேலை வாய்ப்பு. |
| 7.43 வீதம் | ,, ,, | முஸ்லீம்களுக்கு 4 வீதம் அரசாங்க வேலை வாய்ப்பு. |

பாதுகாப்புப்படையிலும் ஒரு சதவீதமேனும் முஸ்லீம்களில்லை. நாட்டின் வர்த்தகத்தில் 70 வீதம் சிங்களவர்களால் நிர்வகிக்கப்படும் அரசு நிறுவனங்களாலும், மிகுதி 20 வீதம் அவர்களால் நிர்வகிக்கப்படும் வங்கிகளாலும், 3 வீதம் மட்டுமே முஸ்லீம்களாலும் நிர்வகிக்கப்படுன்றது.

## மீன் பிடித் தொழில்

கல்லோயா-சேனநாயக சமுத்திரம், அம்பலம் ஓயாக்குளம் முதலிய பகுதிகளில் பன்நெடுங்காலமாக மீன் பிடித்து

வந்த கிழக்கிலங்கை முஸ்லீம்கள், அரச அனுசரணையுடன் விரட்டப்பட்டனர். இப்போது மீன் பிடிக்கும் பகுதி களில், 90 வீதம் குடியேற்றப்பட்ட சிங்களவருக்கும் மிகுதி 10 வீதம் பாரம்பரியமாக வசித்து வந்த முஸ்லீம்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. மூதூர்ப் பிரிவில் நாவலடி, குச்ச வெளியில், படலக்கட்டு ஏருவீர்ப்புன்னைக் குடாவில் சிங்கள மீன்பிடிக் குடியேற்றம் நவீன வசதிகளுடன் ஏற்படுத்தப் பட்டு, அங்கு மீன்பிடித் தொழிலை சிவனுபாயமாகக் கொண்டிருந்த தமிழ் பேசும் முஸ்லீம்கள் விரட்டியடிக்கப் படுகின்றனர்.

## முஸ்லீம்களுக்கு எதிரான வன்செயல்கள்

சிங்கள பௌத்த பேரினவாதிகளால் திட்டமிட்ட முறை யில் வன்முறைச் சம்பவங்கள் செயற்படுத்தப்படுகின்றன. முஸ்லீம் மக்களை மூன்றாந்தர மக்களாக அடிமைகளாக என் றென்றும் வைத்திருப்பது என்ற உள்நோக்கின் வெளிப் பாடுதான் இவ்வன்முறைகள்.

*1974 கார்த்திகை 13இல் மஹிபங்கனையில் உள்ள பஸ்கரகம என்னும் முஸ்லீம் கிராமம் எரிக்கப்பட்டது. பள்ளிவாசல் உடைக்கப்பட்டது. ஏழு முஸ்லீம்கள் புத்தளம் ஜும்மா பள்ளிவாசலில் பாதுகாப்புப் படையினரால் கொல்லப் பட்டனர். காலி முஸ்லீம்களுக்கு எதிராக பாதுகாப்பு படையினரின் ஆதரவுடன் சிங்கள வெறியர் வன்செயலில் ஈடுபட்டனர். அரச பெரிய புள்ளிகளின் பங்கெடுப்பு, இதில் உண்டு. 1983 ஜுலையில் இடம்பெற்ற வன்செயல் தமிழருக்கு எதிரானதாக மட்டுமின்றி தமிழ் பேசும் முஸ் லீம்களுக்கும் எதிரானதாக இருந்தது. இவ்வன் செயல் அரசாங்கத்தினுல் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டு அரச படைகளின் தீவிர பங்கேற்புடன் நடத்தி முடிக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையாகும்.*



*1983 ஜுலை வன் செயலில் ஏற்பட்ட இழப்புகள் :*

| | வன்செயல் எண்ணிக்கை | நட்ட மதிப்பீடு ரூபா | வீடுகள் | கடை தொழில் |
|---|---|---|---|---|
| கொழும்பு - | 128 | 231,260,000 | 20 | 108 |
| கண்டி - | 28 | 5,155,000 | 03 | 25 |
| பதுளை - | 31 | 7,505,000 | 03 | 28 |
| திருமலை - | 20 | 2,306,000 | 04 | 16 |
| மன்னூர் - | 17 | 210,800 | | 17 |
| புத்தளம் - | 03 | 578,000 | | 03 |
| ம.களப்பு - | 05 | 388,765 | | 05 |
| கேகாலை - | 17 | 2,408,500 | | 17 |
| கம்பஹா - | 10 | 2,746,000 | | 10 |
| மாத்தளை - | 08 | 649,000 | | 08 |
| களுத்துறை - | 14 | 3,521,000 | | 13 |

*(ஆதாரம்; அகில இலங்கை முஸ்லீம் லீக்)*

*(பத்து முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர்)*

இலங்கையில் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவது என்ற போலி நாடகம் சர்வகட்சி மகாநாடு நடந்து கொண்டி ருந்த வேளையில் (1983 டிசம்பர்-18) கண்டி மாவில் மடை யிலுள்ள முஸ்லீம் புனித அடக்கஸ்தலம் தரைமட்டமாக்கப் பட்டது. இறந்தவர்களைக்கூட நிம்மதியாக விடவில்லை பேரினவாதிகள். பள்ளி வாசல் கட்டிடத்தில் பௌத்த கொடி ஏற்றப்பட்டது. பின்னர் இப்பள்ளி வாசல் தீக் கிரையாக்கப்பட்டது. அம்பாறை ஜும்ஆப் பள்ளிவாச லுக்களிக்கப்பட்டிருந்த காணிக்கான உத்தரவுப் பத்திரம் புயல் பேரழிவில் தொலைந்தபோது புதிய பத்திரத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்டபோது கிடைத்த பதில்

காணியை விட்டு வெளியேறும் கட்டளைதான். அம்பாறை நெற்சோலை பள்ளிவாசல் காணி சிங்களவர்களது கரப்பந் தாட்டத்திடலாக மாற்றப்பட்டுள்ளது. தீகவாப்பி திராய் ஓடைப்பள்ளியை திருத்துவதற்கு அரசாங்கம் தடைவிதித் துள்ளது. சிறிலங்கா அரச பயங்கரவாதிகள், உரிமைக்காகப் போராடும் தமிழ்த் தேசிய இன மக்களை அடக்கி ஒடுக்கு வதற்கு சர்வதேசப் பயங்கரவாதிகளான இஸ்ரேலியர் களின் உதவியை நாடிப் பெற்றபோது இலங்கை வாழ் தமிழ் பேசும் முஸ்லீம்கள் கொதித்தெழுந்து. ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தினர். அரசாங்கம் இவ்வெழுச்சியை வன்முறையின் மூலம் அடக்கியது. மட்டக்களப்பில் பள்ளி தொழுவதற்காகச் சென்றுக்கொண்டிருந்த சிறுவனை நிந்தவூர் முகம்மது அலி பாதுகாப்புப் படையின் துப்பாக் கிக் குண்டினால் ஊனமாக்கப்பட்டான்.

சில காலத்திற்கு முன்னர் 'முஸ்லீம்களே அரேபியாவிற்கு ஓடுங்கள்' என்ற கருத்துடன கூடிய பிரசுரங்கள் முஸ்லீம் மக்களுக்கு அனுப்பப்பட்டது என்பதும் நினைவுகூறத் தக்கது.

இவ்வன் முறைகள் தொடருகின்றன. தமிழ் பேசும் முஸ் லீம்களது நலன்களும் ஈழத்தமிழ் மக்களது நலன்களும் ஒன்று கலந்தவையே இருபகுதியினருமே தமது பௌத்த சிங்கள பேரினவாதக் கோட்பாட்டை எதிர்ப்பார்கள் என இனங்கண்டு கொண்டுள்ள பயங்கரவாத அரசு, இப்போது முஸ்லிம் மக்களைச் சுட்டுத்தள்ளும் கைங்கரியத்தில் இறங்கி யுள்ளது.

மூதூரில், மல்லிகைத் தீவில் வேளாண்மை அறுவடைக் காகச் சென்ற இஸ்லாமியக் கூலி விவசாயிகள் ஊர்காவற் படையினராலும் இராணுவத்தாலும் 1913-10-14இல் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



(1) அப்துல் ஹமீத் அன்சார் (வயது 23)
(2) முகமட் சவ்ஹீம் (வயது 21)
(3) பக்கீர் குட்டி சலீம் (வயது 28)
(4) மஸ்தான் நசீம் (வயது 18)
(5) சேருமுகமட்ராசாத்தம்பி (வயது 48)

மன்னார் உயிலங்குளத்தில் 1985-10-07 அன்று இராணுவத் தால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒன்பது தமிழ் பேசும் மக்க ளில் அறுவர் முஸ்லீம்கள். யாழ்ப்பாணக்கோட்டையிலி ருந்து முஸ்லீம் மக்கள் வாழும் பகுதியை நோக்கித் திருப்பி விடப்பட்ட பீரங்கியின் வெடிகுண்டுகள் ஏராளமான மக்களைப் படுகாயப்படுத்தியுள்ளது.

# இனி....

தமிழ் பேசும் மக்களுக்கு இன்று ஒரு நெருக்கடி மிகுந்த காலகட்டமாகும். சர்வதேச பேரின வாதிகளாகிய, இஸ் ரேலியரும், தென்னாப்பிரிக்க வெள்ளை அரசு மற்றும், இஸ்ரேலியர்களுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கைப்பொம்மை அரசு களும் சிறிலங்கா பேரினவாத அரசுக்கு ஆயுத விநியோகத் தை மட்டுமின்றி திட்ட வரைவுகளையும் வகுத்துத் தரு கின்றன.

சிங்கள பௌத்த பேரினவாதத்தால் ஒடுக்கப்படுகின்றவர் கள், தமிழீழப் பகுதிகளாகிய வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களாவர். முஸ்லீம் மக்களும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களே. அவர்களுக்கும் வடக்கு கிழக்கு பகுதி பாரம்பரியப் பிரதேசமே. வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் முஸ்லீம்களது வாழ்வும் வளமும் தமிழ் மக்களோடு இணைந்ததே.

ஆனுல் சமீபத்திய கிழக்கு மாகாண தமிழ் முஸ்லீம் கலவரங்கள் ஒரு வடுவை உருவாக்கியுள்ளமை மறுக்க முடியாத நிகழ்வு. ஒருசில ஆயுதந்தாங்கிய போராளிகளது சில நடவடிக்கைகள், சிறு பொறியாக இருந்துள்ளன. இஸ்ரேலிய பின்னணியுடன் சிறிலங்கா அரசு ஏற்கனவே இதற்குத் திட்டமிட்டு இருந்தது. கலவரத்தின் பின்னணியில் அரசும், அரசு சார்பு தீய சக்திகளும் இராணுவமும் காடையர்களும் இருந்துள்ளனர் என்பது கிழக்கின் முஸ்லீம் அரசியல் பிரமுகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கலவரம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, கலவரத்தை அடக்குவதற்கும், பரவவிடாது தடுப்பதற்கும், சுமுக நிலையைத் தோற்றுவிப்பதற்கும், தீய சக்திகளை இனங்கண்ட பல முஸ்லீம்-தமிழ் மக்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுத்தனர். வெற்றியும் கண்டனர். இவர்களது சேவை போற்றுதற்குரியது. பாதிக்கப்பட்ட பல்வேறு கிழக்குமாகாண கிராமங்களில் சமாதான சபைகள் மக்களின் முன்முயற்சியினுல் அமைக்கப்பட்டு வருகின்றன. வேறுபட்ட கலாச்சார பின்னணியைக் கொண்டிருந்தாலும், இன்று வாழ்வா? சாவா? என்ற நிலைப்பாட்டிலிருக்கும், தமிழ் பேசும் இருசாராரும் நடந்தவற்றை மன்னித்து மறந்து உரிமைப் போராட்டத்தில் ஒன்றிணைந்து சர்வ தேசியப் பயங்கரவாதத்தின் ஒரு அங்கமாகிய சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராட வேண்டும்.

ஒடுக்கப்படுகின்ற ஓரினம், ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும்போது, அந்த இனம், தனது சுய கௌரவத்தையும், மொழியையும், நிலத்தையும், பொருளாதாரத்தையும் காப்பாற்றுவதற்காக தனது தலைவிதியை தானே நிர்ணயிக்கப் போராடும்போது தவிர்க்கவே முடியாதவாறு அதற்கென ஒரு அரசு உருவாவது சாத்தியமே. சாத்வீக அரசியல் போராட்டத்தை வன்முறை மூலம், ஆயுதம் கொண்டு ஒடுக்கும் போது அப்போராட்டம் ஆயுதந்தாங்கிய போராட்டமாகப் பரிணமிப்பது தவிர்க்க முடியாத



நியதியாகும். எனவே இது குறுகிய தேசிய வாதமல்ல பிரிவினை வாதமுமல்ல.

வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் முஸ்லீம்கள் இப்போராட்டத்தில் தாமே தமது நிலையைத் தீர்மானிக்க வேண்டும். இந்நிர்ணயிப்பு, சுதந்திர வேட்கையுடன், சமத்துவத்துடன், சகோதரத்துவத்துடன் தொடர்பு கொண்டது. வடக்கில் கிழக்கில் *1/3* பங்கு தமிழ் பேசும் முஸ்லீம்கள் வாழுகின்றனர். அவர்களது வாழ்நிலையான இங்கு இம் மக்கள் உறுதியான ஒரு ஸ்தாபனத்தைக் கட்டிவளர்க்க வேண்டியது அவர்களது இன்றைய வரலாற்றுக் கடமையாகும். இதிலிருந்து அவர்கள் தவறுவது அவர்கள் எதிர் காலத்தையும் ஒட்டு மொத்தமாக தமிழ் பேசும் இருசாராரையும் பாதிக்கும். தமிழ் பேசும் மக்கள் தங்கள் சுயாதிபத்திய உரிமையைப் பெற வேண்டும்.

கொழும்பை மையமாகக் கொண்டு, தமது சுய நல நாட்டத்திலேயே அமுங்கிக் கொண்டு, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் முஸ்லீம்களது அன்றுட வாழ்க்கைப் பிரச்சனையில் அக்கறை காட்டாது, இன்று செல்லாக் காசாகிக் கொண்டிருக்கும் தலைமையைத் தூக்கியெறிய வேண்டும். இனியும் இவர்களை நம்புவதால் பிரயோசனமில்லை என்பதை வரலாறு தமிழ் பேசும் சகல மக்களுக்கும் தெளிவாக்கியுள்ளது.

தமிழ் பேசும் மக்களது உரிமைப் போராட்டம் நிச்சயம் வெற்றிக்கே இட்டுச் செல்லும். இதுவே வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழும் பாதுகாப்பை உறுதி செய்யும். அவர்களது நலன்கள் பாதிக்கப்படும் போது, அவர்களுக்காக குரல் கொடுக்க செயல்பாட்டில் இறங்காத தமிழ் பேசும் முஸ்லீம்களுக்கும் தமிழர்களுக்கும் ஒரு தளம் வேண்டும். அந்தத் தளம் சுதந்திர, சமதர்ம, மதச்சார்பற்ற தமிழீழமேதான்.

## முஸ்லீம் தமிழ் சஞ்சிகைகளிலிருந்து சில பகுதிகள்

- கிழக்கிலங்கை முஸ்லீம்களைக் காரணங் காட்டியே இவ்விரு மாகாணங்களின் ஒருங்கிணைவை பேரினவாதிகள் பிற்போட்டு பிரித்தே வைத்துச் சுயலாபம் காண முனைவர் என்றும்,
- இதற்காக தூரதிருஷ்டியில்லாத, பிரபல்யக் காய்ச்சலும் பதவிப் பித்துமுள்ள முஸ்லீம் சமூகத் துரோகிகளை பகடையாக பாவிக்க முந்துவர் என்றும்,
- திருகோணமலை, மன்னார் மாவட்டங்களிலும் முஸ்லீம்-தமிழ் இனக்கலவரங்களுக்கு தூபமிடுவர் என்றும்,
- தம்மில் புதிதாக நம்பிக்கையை முஸ்லீம்கள் வளர்க்க வேண்டுமென்று உடனடி அற்பலாபங்களை செய்து அவற்றை தம் அடிவருடிகளைக் கொண்டு மூலைக்குமூலை பிரசாரக்கூட்டம் வைத்து பெரிதுபடுத்திக் காட்டுவர் என்றும்,
- தமக்கு லாபமான கருத்துக்கு உடன்பாடான அசட்டு முஸ்லீம் தலைவர்கள் எதிர்க்கட்சியிலிருந்தாலும் பத்திரிகைகளிலும், வானொலியிலும், தொலைக்காட்சியிலும் அவர்களுக்கு அளப்பரிய பிரசித்தம் கொடுத்து அக்கருத்தை முஸ்லீம் மக்களிடையே பரவலாக்கி வடகிழக்கு ஒருங்கிணைவிற்கு எதிராகச் சதிசெய்ய முனைவர் என்றும்,

கிழக்கிலங்கை முஸ்லீம் முன்னணி வெளிப்படையாகவும் உட்கிடையாகவும் இவ்விரு பிரதேச முஸ்லீம்களையும் எச்சரித்துமிருந்தது..............

(முஸ்லீம் செய்தி 19-7-85)



எது எவ்வாறுய் இருப்பினும் யார் எங்கு சேர்ந்து கொள்ளினும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லீம்கள் தமது மொழி, கலாச்சார அந்நியோன்னியத் தொடர்புகள் காரணமாக, தமிழ் இனத்துக்கு அருகிலேயே தாம் நிற்பதைக் காண்பார்கள்.

(முஸ்லீம் செய்தி 19-7-85)

தம்மைப்போல உரிமைகளை இழந்தவர்களும் அதற்காக தம்மை ஒரு பலித்தியாகத்தில் ஈடுபடுத்தி தமது இனமீட்சிக்கும், இன மறுமலர்ச்சிக்கும், சந்ததி சுபிட்சத்திற்குமாய் உரிமைப் போராட்டத்தில் இறங்கியுள்ள தமக்கு முந்திய சிறுபான்மையோரோடாவது சேர்ந்து தமது முஸ்லீம் உரிமைகளை வென்றெடுக்க முஸ்லீம்கள் முன் வராதது ஏன்? ஆளும் வர்க்கத்தின் கனவில் தர்மிஷ்டப் போதனாசிரியர் தோன்றி ''தமிழர்களைத் தவிர்த்தாலும் பரவாயில்லை, முஸ்லீம்களின் உரிமைகளைக் கொடு'' என்று சொல்வதுடன் முஸ்லீம்களின் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று நம்பிக்கொண்டா முஸ்லீம்கள் மௌனியானார்கள்.

(முஸ்லீம் செய்தி 19-7-85)

சிறுபான்மையினரின் உரிமைக்கென தம் உயிர், உடமை முன்னேற்றம், சுகவாழ்வு அனைத்தையும் ஆபத்தேதுவாக்கி போராடுகின்ற விடுதலைப் போராளிகளும் சாத்வீக முறையில் போராடுகிற மதிப்பிற்குரிய தமிழ்த் தலைவர்களும் தமக்கு மாநில ஆட்சி கிடைக்கும் பட்சத்தில், தம்மிடம் சிறுபான்மையாக இருக்கப்போகின்ற முஸ்லீம்கள் விவகாரத்தில், சிங்களவர் தம்மை நடத்தியது போன்றே முஸ்லீம்களை நடாத்த முற்படுவார்கள் என்று கலவரம் கொள்வது உரிமைப்போராளிகளுக்கு செய்யும் வஞ்சமாகும்.

(முஸ்லீம் செய்தி 19-7-85)

தமிழர்களிலும் முஸ்லீம்களிலும் உள்ள நிதான சிந்தனே யுடையவர்கள் ஒன்றிணைந்து இரு சமூகத்தாரிடையேயும் ஒற்றுமையைக் கொண்டுவரும் வழிகள் பற்றி ஆராய வேண்டியது கட்டாயமாகும். இரண்டு சமூகத்தாரும் அவசியமற்ற பிடிவாதங்களிலிருந்து விடுபட்டு அடிப்படை அம்சங்களில் இணக்கம் கண்டு கிழக்கிலங்கை எங்கும் சகஜ நிலே தோற்றுவிக்க தொடர்ந்து போராட வேண்டும். இவ்விடயத்தில் தூரநோக்கோடு தமிழ்-முஸ்லீம் இளைஞர் செயற்பட வேண்டும்.

(அல்ஹசனுத் - மே - 1985)

□ □ □

[illegible]

( [illegible] 1983 )

□ □ □



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் களப்பலியான முஸ்லிம் தோழர் திரு. ஜுனை தீனுக்கு (ஜோன்சன்) இந்நூல் காணிக்கை.